# DEPOSITION OF WITNESS
## ( In the Court of the Principal District Munsif, Sankarankovil )

## O.S. No. 362/2015

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW1 |
| Name | : வேதநாயகம் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 01.02.2019 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 01st February 2019.

**முதல் விசாரணை :**

நான் வழக்கின் 1-வது வாதி. நான் இன்று இந்த வழக்கில் எனக்காகவும், 2-ம் வாதிக்காகவும், சேர்ந்து சத்தியப்பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக் கொள்ள பிரார்த்திக்கிறேன். 20.02.1984 தேதியில் பிராது 1-ம் தபசில் சொத்தை நான் கிரையம் பெற்றேன். அந்த கிரைய ஆவணத்தின் சார்பதிவக நகல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ.1, 20.02.1984 தேதியில் பிராது 1-ம் தபசில் சொத்திற்கு மேற்கில் உள்ள சொத்தைப் பொறுத்து 1-ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணத்தின் சார்பதிவக நகல் தாக்கல்

செய்கிறேன் அது வா.சா.ஆ.2,28.04.2015 தேதியில் 1-ம் பிரதிவாதி, 2-ம் பிரதிவாதி பெயரில் எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் சார்பதிபக நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.3, வழக்கு சொத்திற்குரிய கணிணி பட்டா வா.சா.ஆ.4. நான் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கில் நாங்கள் கோரும் பரிகாரம் வழங்கிட பிரார்த்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை :** பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது